# தமிழ் நாடு

## தமிழக வாராற்றுச் சான்றுகள்

### எது எங்கே கிடைத்தது....

- கற்காலக் கருவிகளான குவார்ட்சைட் கற்கள் - பல்லாவரம் (சென்னை)
- பழைய கற்கால கைக்கோடரிகள் - சென்னையை அடுத்துள்ள கொறட்டலையாற்றுச் சமவெளி, வடமதுரை.
- இரும்புகால கருவிகள் - ஸ்ரீபெரும்புதூர்.
- பெருங்கற்கால நீத்தார் நினைவுச்சின்னங்கள் - காஞ்சி , வேலூர், கடலூர் , திருச்சி, தி.மலை மாவட்டங்கள்.
- முதுமக்கள் தாழிகள் - ஆதிச்ச நல்லூர்(நெல்லை).
- ரோமாபுரி நாணயங்கள் - அரிக்கமேடு (பாண்டிச்சேரி).
- சங்ககால கப்பல் சிதைவுகள் - பூம்புகார் கடல் பகுதி.
- சங்கம் மருவிய காலத்து புத்த விகாரம் - கீழையூர்(காவிரிப் பூம்பட்டினம்).

### இதை அறிய இது உதவுகிறது...

- சங்ககாலம் குறித்த கருத்துக்கள்: சின்னமனூர் செப்பேடுகள்.
- சேரர் வரலாறு: பதிற்றுப்பத்து நூல்.
- சங்கங்கள் இருந்த காலம்: மகாவம்சம், தீபவாம்சம்
- பாண்டியர் பற்றி: அசோகரின் II – XIII – ம் கல்வெட்டுகள்.
- தமிழக அரசுகளைப் பற்றி: கலிங்க மன்னன் காரவேலனின் அதிகும்பா கல்வெட்டு.
- பாண்டியர்கள் பற்றி: வேள்விக்குடி செப்பேடுகள்.
- பழங்காலத் தமிழ் பிராமி எழுத்துகள் பற்றி: கழுகுமலைக் கல்வெட்டுகள்.
- தமிழ் குறுநிலமன்னர்கள் பற்றி: திருக்கோவிலூர் கல்வெட்டு.
- சமணத் துறவிகள் பற்றி: திருப்பரங்குன்ற கல்வெட்டு.
- சேர மன்னர்கள் பற்றி: ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டு.
- களப்பிரர் காலம் பற்றி: தமிழ் நாவல் சரிதை, யாப்பெருங்கலம்.
- களப்பிரர் பற்றி: காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவில் கல்வெட்டு, தளவாய்புரம் செப்பேடு, திருப்புகலூர் கல்வெட்டு.
- பிற்காலச் சோழர்களின் குடவோலை முறை பற்றி : உத்திரமேரூர் கல்வெட்டு.
- பல்லவர்கால இசை பற்றி: குடுமியான்மலைக் கல்வெட்டுகள்.
- பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக்காரார்கள் ஆட்சி பற்றி: ஆனந்தரங்கம் பிள்ளை டைரிக் குறிப்புகள்.
- சங்ககாலம் குறித்த இலக்கியச் சான்றுகளில் முக்கியமானவை தொல்காப்பியம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை.
- பதினெண்கீழ்கணக்கு . சிலப்பதிகாரம். மணிமேகலை ஆகியன சங்கம்மருவிய காலத்து நூல்கள்.
- ஆதிச்ச நல்லூரில் அகழாய்வு செய்தவர் ராபர்ட் புரூஸ்பூட்.
- துப்ரேல், மார்டிமர்வீல் - அரிக்கமேட்டில் ஆய்வு செய்தவர்கள்.
- சாளுவன் குப்பம் என்ற இடத்தில் சங்ககால கோட்டமும் பல்லவர் கால கோயிலும் கண்டறிப்பபட்டுள்ளன.

## சுதந்திரப் போரில் தமிழகம்

- ஆங்கிலேயருக்கு எதிராக பாளையக்காரர்கள் போரிட்டதை தென்இந்திய விடுதலைப்போர் என்கிறார் சரித்திர ஆசிரியர்: கே.ராசய்யன்.
- ஆங்கிலேயருக்கு வரி செலுத்த மறுத்த நெற்கட்டும் செவல் பாளையக்காரர், பூலித்தேவன்.
- பூலில்தேவனுக்கு ரகசியமாக உதவிவந்த தூத்துக்குடி டச்சுக்காரர்கள் மீது ஆங்கிலேயர் சார்பாக யூசுப்கான்தாக்குதல் நடத்தினார்.
- பனையூரில் பிறந்து 1757 முதல் 1763 வரை ஆங்கிலேயருக்காக நெல்லையில் வரி வசூல் நிர்வாகம் நடத்தியவர் யூசுப்கான்(மருதநாயகம், கான்சாகிப் என்பதும் இவரின் பெயர்கள்).
- பூலித்தேவன்,1759-ல் நடைபெற்ற ஆந்தநல்லூர் போரில் யூசுப்கான் தலைமையிலான அற்காடு நவாப் படையால் தோற்கடிக்கப்பபட்டார்.
- 1763-க்குப் பின் பிரெஞ்சுக்காரர்கள் உதவியைப்பெற்று சுய ஆட்சியை நிறுவ முயன்ற யூசுப்கான, பிரிட்டிஷ் தளபதி டொனால்டு கெம்பெலால் சிறைபிடிக்கப்பட்டார்.
- தென்னிந்தியாவில் அங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட முதல் அரசியல் கைதி யூசுப்பான்.
- பூலித்தேவனை 1767-ல் பிரிட்டிஷ் தளபதி கேம்பெல் தோற்கடித்தார்.
- 1761-ல் பிறந்து 1790-ல் பாஞ்சாலங்குறிச்சிக்கு பாளைககாரராய் ஆனவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.
- 1798-ல் ஏற்பட்ட பஞ்சத்தால் கட்டபொம்மன் கப்பம் கட்டுவதில் சிரமம் ஏற்பட்டது.
- கட்டபொம்மனைச் சந்திக்க அழைத்தார் ராமநாதபுரம் கலெக்டர் கோலின் ஜாக்கசன்.
- 23 நாட்கள் அவரை சந்திக்காமல்அலைக்கழித்து. கடைசியாக 1798செப்படம்பர் 19-ல் ராமநாதபுரத்தில் கட்டபொம்மனை ஜாக்சன் சந்தித்தார்.
- எட்வர்ட் கிளைவ் அமைத்த கமிஷன் முன்பு 1798. டிசம்பர் 15-ல் கட்ட பொம்மன் சாட்சியம் அளித்தார்.
- 1799-ல் மருது சகோதரர்கள் ஏற்படுத்திய அங்கிலேயர் எதிர்ப்பு அமைப்பை கட்டபொம்மன்ஆதரித்தார்.
- கட்டபொம்மன், சிவகிரி பாளையக்காரரையும் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரட்ட முனைந்தார்.
- கட்ட பொம்மனுக்கு எதிராக பானர்மேன் மே, 1799-ல் படை எடுத்தார்.
- பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை பானர்மேன் தகர்த்தார்.
- புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான் கட்டபொம்மனைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்.
- 1799-ம் அண்டு அக்டோபர் 16-ல் கட்டபொம்மன் ஆங்கிலேயரால் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார்.
- மருது சகோரர்கள் ஊமைத்துரைக்கு அடைக்கலம் அளித்தனர்.
- ஆங்கிலேயர்களுக்கு எதிரான திருச்சி பிரகடனம் 1801-ல் மருது சகோதரர்களால் வெளியிடப்பட்டது.
- 1801-ல் , காளையார் கோவில் போரில் தோற்கடிக்கப்பட்ட மருது சகோதரர்கள். திருப்பத்தூரில் தூக்கில் இடப்பட்டனர்.

- ❖ வேலூரில் சிறை வைக்கப்பட்டு இருந்த திப்பு சுல்தானின் புதலர்வர்களை மீட்க வேலூார் புரட்சி நடைபெற்றது.(9.7.1806).
- ❖ வேலூர் புரட்சியால், கர்னல் கில்லஸ்பியால் ஒடுக்கப்பட்டது.
- ❖ ஆங்கிலேயருக்கு எதிரான முதல் ராணுவப் புரட்சி என வேலூர் புரட்சி வர்ணிக்கப்படுகிறது.
- ❖ 1852-ல் Madras Native Association – தொடங்கப்பட்டது.
- ❖ ஹிந்து, சதேசமித்திரன். தேசபக்தன்போனற பத்திரிக்கைகள் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தின.
- ❖ 1884-ம் ஆண்டு மெட்ராஸ் மகாஜன சபை தொடங்கப்பட்டது.
- ❖ இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கக் காரணமான கமிட்டியின் முக்கிய உறுப்பினர் -சேலம் சி.விஜயராகவாச்சாரியார்.
- ❖ 1887,1895,1898-களில் இந்திய தேசிய காங்கிரஸின் மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- ❖ தமிழ்நாட்டில் சதேசி இயக்கம் வ.உ.சிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.
- ❖ வ.உ.சி, பிரிட்டிஷ் அரசை எதிர்த்து Swadeshi Steam navigation company - யை
- ❖ 16.10.1906-ல் தூத்துக்குடியில் தொடங்கினார்.
- ❖ வ.உ.சி, விட்ட கப்பல்களின் பெயர்கள் கலியா, லாவோ.
- ❖ திலகரின் தீவிரவாதத்தை வ.உ.சியும், சுப்பிரமணிய சிவாவும் ஆதரித்தனர்.
- ❖ 1908-ல் போராட்டம் செய்த தூத்துக்குடி கோரல்மில் தொழிலாளிகளைச் சுட உத்தரவிட்டவர் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரை.
- ❖ 1911-ல் ஜுன் 17-ல் மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆஷ் துரை வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்.
- ❖ ராஜதுரோக குற்றத்ததுக்காக இரட்டை ஆயுள்தண்டனை பெற்ற வ.உ.சி. கண்ணனூர் சிறையில் செக்கிழுத்தார்.
- ❖ தேசபக்தர் சுப்பிரமணிய சிவா பாப்பாரப்பட்டியில் பாரதத்தாய்க்கு கோயில் கட்ட முயன்றார்.
- ❖ அன்னி பெசன்ட் தொடங்கிய ஹோம் ரூல் இயக்கத்தை ஆதரித்தவர்கள்: திரு.வி.க.பெரியார், டாக்கடர் வரதராஜுலு.
- ❖ சி.விஜயராகவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ தமிழகத்தில் ராஜாஜி , பெரியார் , சத்தியமூர்த்தி ஆகியோர் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தனர்.
- ❖ சைமன் கமிஷன் புறக்கணிப்புப் போராட்டம். சத்தியமூர்த்தி தலைமையில் 1927-ல் நடைபெற்றது.
- ❖ 1927-ல் கர்னல் நீல் சிலையை அகற்றுவதற்கான போராட்டம் சென்னையில் நடைபெற்றது
- ❖ 1930-ல் ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றது.
- ❖ வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக ஊர்வலத்தில் நாமக்கல் கவிஞரின் கத்தியின்றி ரத்தமின்றி பாடல் பாடப்பட்டது.
- ❖ 1932, ஜனவரி 11-ல் நடந்த ஊர்வலத்தில் திருப்பூர் குமரன் போலீஸ் தடியடியால் உயிர் துறந்தார்.
- ❖ திருப்பூர் குமரன் , கொடிகாத்த குமரன் என்று அழைக்கப்படுகிறார்.
- ❖ 1932, ஜனவரி 26-ல் பாஷ்யம் ஐயங்கார் . புனித ஜார்ஜ் கோட்டையின் கொடிக்கம்பத்தில் ரகசியமாக ஏறி மூவர்ணக்கொடியை ஏற்றினார்.

- ❖ 1940-ல் நேதாஜி தொடங்கிய பார்வட் பிளாக் கட்சியின் தமிழக தலைவராக இருந்தவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.
- ❖ 1942-ல்வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் காமராஜர் , பக்தவத்சலம் போன்றோர் பங்கேற்றனர்.

தமிழக வரலாற்றில் இவர்கள்

ராஜாஜி

- கிரஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தொராப்பள்ளியில் டிசம்பர் 18,1878-ல் பிறந்தார்.
- ராஜாஜியின் முழுப்பெயர் சி.ராஜகோபலாச்சாரியார்.
- சேலம் மவட்டத்தில் பல பதவிகள் வகித்தவர்.
- சென்னை மாகாணப் பிரிமியர்(1937-39)வங்காள ஆளுநர் (2947-48) பதவிகளை வகித்தார்.
- 1943-ல் இந்திய சுதந்திரத்துக்கு இவர் வகுத்தத் திட்டம் சி.ஆர். திட்டம் எனப்படும்.
- 1948-ல் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவியெற்றார்.
- இந்தியாவின் ஒரே இந்திய கவர்னர் ஜெனரல் இவர்தான்.
- சென்னை மாகாண முதல்வராக (1952-54)பணியாற்றினார்.
- மகாபாரதத்தை வியாசர் விருந்து என்ற பெயரில் தமிழில் உரைநடையாக எழுதியுள்ளார்.
- இராமாயணத்தை சக்கரவர்த்தித் திருமகன் என்ற பெயரில் எழுதியுள்ளார்.
- திண்ணை ராசாயனம் என்ற அறிவியல் தமிழ் நூலையும் ராஜாஜி எழுதியுள்ளார்.
- சபேசன் காபி, தெய்வானை ஆகியவை ராஜாஜி எழுதிய புகழ் பெற்ற சிறுகதைகள்.
- உபநிடத பலகணி என்ற நூலையும் ராஜாஜி எழுதியுள்ளார்.
- ராஜாஜி திருசெங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை நடத்தினார்.
- இந்தியாவில் முதல்முதலாக பாரதரத்னா விருது 1954-ல் இவருக்குத்தான் வழங்கப்பட்டது.
- ராஜாஜி ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் முதல்முதலாக மதுவிலக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
- மதுவிலக்கை வலியுறுத்தி ராஜாஜி நடத்திய இதழ் விமோசனம்.
- மூதறிஞர் என்பது ராஜாஜியின் சிறப்புப் பெயர்.
- முதல்முதலாக இராஜாஜி காலத்தில்தான் விற்பனை வரி விதிக்கப்பட்டது.
- ராஜாஜி டிசம்பர் 25. 1972-ல் மறைந்தார்.
- காந்தியடிகள் இவரைத் தன் மனசாட்சி (My Conscience) என்று வர்ணித்துள்ளார்.

பெரியார்

- ❖ ஈரோட்டில் செப்டம்பர் 17, 1879-ல் பிறந்தார்.
- ❖ பெரியாரின் இயற்பெயர் - ஈ .வெ.ராமசாமி நாயக்கர்.
- ❖ சுயமரியாதை இயக்கத்தை 1925-ல் தொடங்கினார்.
- ❖ தொடக்கத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு கதராடை அணிந்தார்.

- கேரள மாநிலம் வைக்கத்தில் நடைபெற்ற ஆலய நுழைவுப்போராட்டத்தில் கலந்தகொண்டு வைக்கம் வீரர் என்று பெயர் பெற்றார்(1924-1925).
- பகுத்தறிவுப் பகலவன் ,தென்னாட்டு இங்கர்சால் போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவர்.
- பெண்கள் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டு பெண்கள் மாநாட்டில் பெரியார் என்ற பட்டம் பெற்றார்.
- பிற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு கோரிய முன்னோடி.
- கடவுள் மறுப்புக் கொள்கையை வலியுறுத்தியதால் தென்னாட்டு இங்கர்சால் என்று பெயர் பெற்றார்.
- சமூக, சமய மூடப் பழக்கங்களைக் கடமையாகச் சாடியவர்.
- மழைபெய்வது பொதுநலம்.குடை பிடிப்பது சுயநலம் என்பது இவரின் மேற்கோள்களில் ஒன்று.
- குடியரசு , விடுதலை என்பவை பெரியார் நடத்திய இதழ்கள்.
- கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் பங்குபெற்றதோடு தனக்குச் சொந்தமான ஐநூறு தென்னை மரங்களை வெட்டினார்.
- *தொண்டு செய்து பழுத்த பழம்,*<br>*தூய தாடி மார்பில் விழும்,*<br>*மண்டைச் சுரப்பை உலகு தொழும்,*<br>*மனக்குகையில் சிறுத்தை எழும்* -என்று இவரை வர்ணிக்கிறார் பாரதிதாசன்.
- ராஜாஜி . திரு.வி.க இருவரும் பெரியாரின் நெருங்கிய நண்பர்கள்.
- பெரியார் 1944-ல் திராவிடர் கழகத்தைத் தொடங்கினார்.
- பெரியார் 94 வயதுவரை வாழ்ந்து, சமூக முன்னேற்றத்துக்காக உழைத்தார்.
- பெரியார் டிசம்பர் 24,1973-ல் மறைந்தார்.
- அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோரின் அரசியல் குரு இவர்.
- தந்தை பெரியாரின் வாழ்வைச் சித்தரிக்கும் பெரியார் திரைப்படம் 2007-ல் வெளியானது.

காமராஜர்

- காமராஜர் விருதுநகரில் ஜுலை 15, 1903-ல் பிறந்தார்.
- காமராஜரின் பெற்றோர் குமாரசாமி - சிவகாமி அம்மாள்.
- இளமை முதலே விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர் காமராஜர்.
- காமராஜின் அரசியல் குரு தீரர் சத்தியமூர்த்தி ஆவார்.
- கர்மவீரர் , படிக்காத மேதை , பெருந்தலைவர் -என்பவை காமராஜரின் சிறப்புப் பெயர்கள்.
- லால் பகதூர் சாஸ்த்ரி , இந்திரா காந்தி ஆகியோரை பிரதமராக்கியதால் கிங்மேக்கர் எனப்பட்டார்.
- காமராஜரை பச்சைத் தமிழர் என்று குறிப்பிட்டவர்: தந்தை பெரியார்
- காமராஜர் 1954-ல் தமிழக முதல்வரானார்.
- காமராஜர் குழந்தைகளுக்கான மதிய உணவு திட்டத்தை அறிமுகபடுத்தினார்.
- ஏழைக் குழந்தைகள் கட்டணமின்றி கல்வி கற்க ஏராளமான அரசுப் பள்ளிகளை நிறுவியதால் காமராஜரை கல்விக்கண் திறந்த காமராஜர் என்கின்றோம்.
- காமராஜர் 1963 அக்டோபர் 2-ம் நாள் காமராஜ் திட்டத்தின் படி முதல்வர் பதவியைத் துறந்தார்.

- காமராஜ் திட்டம்: மூத்த தலைவர்கள் அரசாங்கப் பதவியைப் துறந்து கட்சிப்பணிக்குச் செல்வது!
- காமராஜர், அக்டோபர் 2, 1975-ல் மறைந்தார்.
- 1976-ல் காமராஜருக்கு (இறப்புக்குப் பின் ) இந்திய அரசங்கம் பாரத ரத்னா விருது வழங்கியது.
- காமராஜ் திரைப்படத்தில் காமராஜராக நடித்தவர் ரிச்சர்ட் மதுரம்.
- காமராஜர் பிறந்த நாளான ஜுலை 15 கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது.

அண்ணா

- காஞ்சிபுரத்தில் செப்டம்பர் 15. 1909-ல் பிறந்தார் சி.என்.அண்ணா துரை.
- அண்ணாவின் பெற்றோர்: நடராஜன் - பங்காரு அம்மாள்.
- பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மிக்கவர்.
- பெரியாரின் சீடர்.
- 1949-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார்.
- 1967-ல் தமிழக முதல்வரானார்.
- இவர் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணம் என்ற பெயர் தமிழ்நாடு என மாற்றப்பட்டது.
- 1968-ல் சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை சிறப்புடன் நடத்தினார்.
- ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ, நல்லதம்பி, வேலைக்காரி , குமரிக்கோட்டம் போன்றவை அண்ணாவின் படைப்புகளில் சில.
- அண்ணா நடத்திய இதழ் திராவிட நாடு.
- திராவிட நாட்டில் அண்ணா எழுதிய தம்பிக்கு என்ற கடிதங்கள் புகழ்பெற்றவை.
- அண்ணா செளவிய ஆண்டில் பிறந்தால் செளமியன் என்ற புனைபெயரில் சிறுகதைகள் எழுதினார்.
- பேய் ஓடிப்போச்சு , செவ்வாழை ஆகியவை அண்ணாவின் புகழ் பெற்ற சிறுகதைகள்.
- ஓர் இரவு என்று நாடகம் எழுதும் அறிஞர் அண்ணாவால் ஒரே இரவில் எழுதப்பட்டது.
- இடஒதுக்கீடு , இந்தி எதிர்ப்பு போன்ற போராட்டங்களோடு தொடர்புடையவர் அண்ணா.
- அண்ணாவின் நாடகம் எழுதும் திறனை வியந்து அண்ணாவை தென்னகத்து பெர்னாட்ஷா என்று புகழ்ந்தவர் கல்கி.
- நாவல் சோமசுந்தர பாரதி,ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோரை அண்ணா சொற்போரில் வென்றுள்ளார்.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது அண்ணாவின் முழக்கம்.
- மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு - எனபது அறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற மேற்கோள்.
- இளம் வயதில் அதியச மனிதர் ஜி.யு.நாயுடு , அண்ணாவைத் தன் உதவியாளராகப் பணியாற்ற அழைத்த போது மறுத்தார் அண்ணா.
- அண்ணா அமெரிக்க ஏல் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.
- அண்ணா பிப்ரவரி 3,1969-ல் புற்றுநோயால் மரணமடைந்தார்.
- அண்ணாவின் இறுதி ஊர்வலம் அதிகமானோர் (சுமார் பத்து மில்லியன்)கலந்து கொண்ட இறுதி ஊர்வலம் என்ற உலகச் சிறப்பு பெற்றது.

- ❖ லோக்சபா,ராஜ்ய சபா,மாநில சட்டப்பேரவை. சட்டமேலவை ஆகிய நான்கு அவைகளுக்கும தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் என்ற சிறப்பைப் பெறுகிறார் அண்ணா.

ஜீவானந்தம் (ஜீவா)

- தமிழக பொதுவுடைமைக் கட்சித் தலைவர்.
- ஜீவா என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.
- மிகச்சிறந்த பேச்சாளர் மற்றும் எழுத்தாளர்.
- ஜீவா 21.8.1907-ல் கன்யாகமரி மாவட்டத்தில் உள்ள பூப்பாண்டியில் பிறந்தார்.
- காலுக்கு செருப்புமில்லை, கால்வயிற்றுக் கூழுமில்லை- என்ற இவரின் பாடல் மிகவும் புகழ்பெற்றது.
- ஜீவா 1937-ல் ஜனசக்தி இதழைத் தொடங்கினார்.
- பள்ளி விழா ஒன்றுக்க ஜீவாவை அழைத்துச்செல்ல வந்த தமிழக முதல்வர் காமராஜர், ஜுவா தன் ஒரே மாற்றுடையை துவைத்து காயவைத்து உடுத்தி வரும்வரை காத்திருந்தாராம்.
- ஒருமுறை பசியால் மயக்கமுற்ற ஜுவாவை , கட்சித்தோழர்கள் உங்களிடம்தான் பணமிருக்கிறதே ஏன் சாப்பிடவில்லை? என்றதற்கு அது கட்சிப் பணம் எனறார் ஜுவா.
- பாரதி மணி மண்டபத் திறப்பு விழாவில் ஜுவா ஆற்றிய உரை மிகவும் புகழிபெற்றது.
- எழுத்தாளர் சுந்தர ராமசாமி எழுதிய காற்றில் கலந்த பேரோசை என்ற கட்டுரை ஜுவா பற்றியது.
- ஜுவா நடத்திய சிராவயல் ஆஸ்ரமத்துக்கு வந்த காந்தியடிகள் உங்களுக்காக எவ்வளவு சொத்து உள்ளது? என்று கேட்க , இந்தியாதான் என் சொத்து என்றார்.
- ஜுவா , உடனே காந்தியடிகள் இல்லை ஜுவா! நீங்கள்தான் இந்தியாவின்சொத்து என்றாராம்.
- ஜுவா 18.01.1963-ல் சென்னையில் காலமானார்.

## பிறந்த ஊர்கள்

- பாரதியார் - எட்டையபுரம்
- பாரதிதாசன் - புதுச்சேரி
- கண்ணதாசன் - சிறுகூடற்பட்டி
- ரமண மகரிஷி - திருச்சுழி
- ராவேந்திரர் - புவனகிரி
- கிரபானந்த வாரியார் -காங்கேய நல்லூர்
- பூலித்தேவன் - நெற்கட்டும்செவல்
- மருதநாயகம் - பனையூர்
- வ.உ.சிதம்பரனார்- ஒட்டப்பிடாரம்
- சுப்பிரமணிய சிவா - வத்தலக்குண்ட
- வாஞ்சிநாதன் - செங்கோட்டை
- கொடிகாத்த குமரன் - திருப்பூர்
- ராஜாஜி - தொரப்பள்ளி

- பெரியார் - ஈரோடு
- காமராஜர் - விருதுநகர்
- அண்ணா - காஞ்சிபுரம்

ஊரறிந்த ரகசியங்கள்

- நாயக்கர்கால சிற்பங்கள் உள்ள ஊர்: கிருஷ்ணபுரம் (நெல்லை மாவட்டம்0
- சோழர்கால நிர்வாகம் பற்றிய கல்வெட்டுகள் கிடைத்த ஊர்: உத்திரமேரூர்.
- பல்லவர்கால இசைக்கலை பற்றிய கல்வெட்டுகள் கிடைத்த ஊர்:குடுமியான்மலை.
- ரோமாபுரி நாணயங்கள் கிடைத்த ஊர்:அரிக்கமேடு.
- சங்ககாலம் குறித்த செப்பேடுகள் கிடைத்த ஊர்:குற்றாலம்.
- தென்னாட்டு ஸ்பா- என்றழைக்கப்படும் ஊர்:குற்றாலம்.
- தென்னாட்டு ஆக்ஸ்போர்டு எனப்படுவது - பாளையங்கோட்டை
- வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டை உள்ள ஊர்: பாஞ்சாலங்குறிச்சி.
- Gateway of Tamilnadu (தமிழ்நாட்டின் நுழைவாயில் ) : தூத்துக்குடி
- சனீஸ்வர பகவான் கோயில் அமைந்த ஊர்:திருநள்ளாறு
- மஞ்சளுக்கு சந்தை அமைந்துள்ள ஊர்: ஈரோடு.
- மருதுபாண்டியர்கள் சிலை அமைந்துள்ள் ஊர் காளையார்கோவில்
- வெறிநாய்க்கடிக்கு மருந்து தயாரிக்கும் Pasteur Institute குன்னூரில் உள்ளது.
- சேர்வராயன் மலையில் உள்ள கோடை வாசஸ்தலம் :ஏற்காடு
- லாரிகளுக்குப் புகழ்பெற்ற ஊர்: நாமக்கல்.
- குட்டி ஜப்பான் என்றழைக்கப்படுகிறது: சிவகாசி.
- தென்னிந்தியாவின் மான்செஸ்டர்: கோயம்புத்தூர்.
- காவிரி - கொள்ளிடம் நடுவே தீவாக உள்ள ஊர் : ஸ்ரீரங்கம்
- யானை வழிபட்ட சிவலிங்கம் அமைந்துள்ள ஊர்: ஸ்ரீவில்லிபத்தூர்.
- தமிழிநாட்டில் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம்(IVPM) உள்ள இடம்: ராணிப்பேட்டை.
- தியாகராயர், சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீட்சிதர் ஆகிய கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த ஊர்: திருவையாறு.
- தமிழகத்தின் நெற்களஞ்சியம்: தஞ்சாவூர்.
- தமிழிநாட்டில் தொல்பழங்கால ஒவியங்கள் கண்டுபிடிக்கப்ட்ட இடம்: கீழ் வளை.
- கிழக்கின் டிராய் என்றழைக்கப்படுவதது செஞ்சி
- கூத்தாண்டவர் கோவில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது.

தமிழக தேசியப் பூங்காக்கள்

- கிண்டி பூங்கா - சென்னை
- மன்னார் வளைகுடா - ராமநாதபுரம்
- முதுமலை - நீலகிரி
- முக்கருத்தி - நீலகிரி

- இந்திரா காந்தி - கோயம்புத்தூர்

தமிழக வனவிலங்கு சரணாலயங்கள்

- வல்லநாடு வெளிமான் - தூத்துக்குடி
- களக்காடு - திருநெல்வேலி
- முண்டந்துறை - திருநெல்வேலி
- கோடிக்கரை - நாகப்பட்டினம்
- சாம்பல் நிற அணில் - ஸ்ரீவில்லிபுத்தூர்

தமிழக பறவை சரணாலயங்கள்

- வேடந்தாங்கள் - காஞ்சிபுரம்
- கரிக்கிளி - காஞ்சிபுரம்
- வேட்டங்குடி - சிவகங்கை
- பழவேற்காடு - திருவள்டுளுர்
- கஞ்சிரங்குளம் - ராமநாதபுரம்
- சித்ராங்குடி - ராமநாதபுரம்
- உதயமார்த்தாண்டம் - திருவாரூர்
- வடுவூர் - திருவாரூர்
- கரைவெட்டி - பெரம்பலூர்
- கூந்தன்குளம் - திருநெல்வேலி
- வெள்ளோடு - ஈரோடு
- விராலிமலை - திருச்சி

தமிழகத்து நீர்வீழ்ச்சிகள்

- புலி அருவி, ஐந்தருவி, செண்பாதேவி - குற்றாலம் பொதிகை மலை(திருநெல்வேலி)
- பழந்தோட்ட அருவி,பழைய குற்றால அருவி, பேரருவி - குற்றாலம் பொதிகை மலை (திருநெல்வேலி)
- திற்பரப்பு அருவி (குமரிக்குற்றாலம்) - கன்னியாகுமரி
- ஒக்கேனக்கல் புகையும் பாறை - தருமபுரி.
- பாணதீர்த்தம் (அகத்தியர் நீர்வீழ்ச்சி)- பாபநாசம்(நெல்லை)
- பஞ்சலிங்க அருவி- திருமூர்த்தி அணைக்கு மேலே(திருப்பூர்)
- ஆகாய கங்கை - கொல்லிமலை (நாமக்கல்)

கிழக்கு தொடர்ச்சி மலையின் பிரிவுகள்

- திண்டுக்கல் - பூட்டு, புகையிலை
- நாமக்கல் - முட்டை
- சிவகாசி - பட்டாசு
- கோவில்பட்டி - தீப்பெட்டி
- ஆரணி - பட்டு
- காஞ்சிபுரம் - பட்டு
- ஊத்துக்குளி - வெண்ணெய்
- கும்பகோணம் - வெற்றிலை

- மதுரை - மல்லிகை
- தஞ்சாவூர் - தலையாட்டி பொம்மை,தட்டு
- திருச்செந்தூர் - சுக்குகருப்பட்டி
- சேலம் - மாம்பழம்
- பண்ருட்டி - பலாப்பழம்
- வேலூர் - முள் கத்திரிக்காய்
- பத்தமடை - பாய்
- பவானி - ஜமுக்காளம்
- சென்னிமலை - போர்வை
- திருப்பூர் - பனியன்

பண்டங்களின் சிறப்பு

- ❖ திருநெல்வேலி - அல்வா
- ❖ ஸ்ரீவில்லிப்புத்தூர் - பால்கோவா
- ❖ திண்டுக்கல் - ஜிலேபி
- ❖ மணப்பாறை - முறுக்கு
- ❖ தூத்துக்குடி - மக்ரூன்
- ❖ சிவகாசி - பக்கோடா
- ❖ கடம்பூர் - போளி
- ❖ ஆற்காடு - மக்கன்பேடா
- ❖ விருதுநகர் - எண்ணெய் புரோட்டா
- ❖ ஆம்பூர் - பிரியாணி
- ❖ கோவில்பட்டி - கடலை மிட்டாய்
- ❖ சாத்தூர் - காரச்சேவு

தமிழ்நாட்டு நிகழ்வுகளும் கமிஷன்களும்

- கோவை குண்டு வெடிப்பு - கோகுல கிருஷ்ணா கமிஷன்
- கும்பகோண பள்ளி தீ விபத்து - சம்பத் கமிஷன்
- சட்டக்கல்லூரி மாணவர் மோதல் - சண்முகம் கமிட்டி
- அருந்ததியர் இடஒதக்கீடு - ஜனார்த்தனன் கமிட்டி
- சமச்சீர் கல்வி - முத்துகுமரன் கமிட்டி
- மத்திய மாநில கமிட்டி - நாகநாதன் கமிட்டி

தமிழ்-செம்மொழி

- ❖ உலகிலுள்ள ஆறாயிரம் மொழிகளில் ஆறு மொழிகள் செம்மொழிகளாகக் கருதப்படுகின்றன.
- ❖ கிரேக்கம், லத்தீன் . எபிரேயம், சீனம். சமஸ்கிருதம், தமிழ் ஆகிய ஆறும் செம்மொழிகள்.
- ❖ செம்மொழிகள் ஈராயிரம் ஆண்டு பழமையும், இலக்கிய வளமும் கொண்டவை.
- ❖ பாலி, அரபி, பாரசீகம், ஆகிய மொழிகளும் செம்மொழிகளாக கருதப்படுவதுண்டு.
- ❖ செம்மொழி தகுதி என்பது மொழியியல் அறிஞர்களால் தீர்மானிக்கப்படுகிறது.

- ஈராயிரம் ஆண்டு தொன்மை, சுயசிந்தனையில் உருவவான இலக்கிய வளம், தனித்த பண்பாடு , தனித்து இயங்கும் தன்மை.தனித்தன்மை. பிற மொழிகளை உருவாக்கிய தாய்த்தன்மை ஆகியவை செம்மொழிகளுக்குரிய முக்கிய தகுதிகளாகும்.
- இந்திய அரசாங்கம் 2004-ம் ஆண்டு அக்டோபர் 12-ம் நாள் தமிழைச் செம்மொழியாக அறிவித்து அரசாணை வெளியிட்டது.
- செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் 2008-ம் ஆண்டு முதல் சென்னையில் செயல்படத் தொடங்கியது.அதன் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி.
- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010-ம் ஆண்டு ஜுன் 23 முதல் 27 வரை கோவையில் நடைபெற்றது.
- செம்மொழிக்கான அரசாணையில் குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டு பழமையான இலக்கிய வளம் கொண்ட மொழிகள் செம்மொழிகளாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- தமிழ் உயர் தனிச் செம்மொழி என்ற கருத்ததை பரிதிமாற்ட கலைஞர் 1897-ல் அவர் எழுதிய தமிழ் மொழி வரலாறு என்ற நூலில் முதன்முதலாக விளக்கியுள்ளார்.
- தென்னிந்தியாவில் பேசப்படும் தமிழ், தெழுங்கு, மலையாளம் , கன்னடம் , குடகு, துளு ஆகிய ஆறு மொழிகளும் வடமொழியிலிருந்து தோன்றியவை அல்ல என்ற கருத்தை அயர்லாந்து நாட்டு மொழியியல் அறிஞர் ராபர்ட் கால்டுவெல் 1858-ல் அவர் வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனற நூலில் விளக்கியுள்ளார்.

சங்கத் தமிழ்

- வட மொழியிலிருந்து வேறுபட்ட இலக்கணத் தன்மை கொண்ட பன்னிரண்டு திராவிட மொழிகளை கால்டுவெல் விளக்கியுள்ளார்.
- ஆறு திருந்திய மொழிகளையும், ஆறு திரந்தா மொழிகளையும் கொண்ட தனி மொழிக்குடும்பமாக திராவிட மொழிக்குடும்பத்தை கால்டுவெல் குறிப்பிட்டார்.
- இந்தியாவில் இன்று 25% பேர் பேசுகின்ற 34 மொழிகளை கொண்ட மொழிக் குடும்பமாக திராவிட மொழி குடும்பம் விளங்குகிறது.
- கால்டுவெல் கருத்துப்படி திராவிட மொழிகளிலேயே மிகப் பழமையானதும் வடமொழிகளில் ஒன்றான பிராஹுய் பாகிஸ்தானிலுள்ள பகிஸ்தானில் பேசப்படுகிறது.
- தமிழ், மலையாளம் , கன்னடம், குடகு , துளு ஆகிய ஐந்தும் தென் திராவிட மொழிகள்.
- தமிழ் என்ற சொல்லே தமிளம் -----திரமிளம் ------- திராவிடம் என்று திரிந்ததாக ராமச்சந்திர தீட்சிதர் குறிப்பிடுகிறார்.

சங்கத் தமிழ்

- சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம் எனப்படுகிறது.
- இறையனார் களவியலுரை என்ற நூல்,மூன்று சங்கங்கள் இரந்ததாகக் குறிப்பிடுகிறது.
- முதல் சங்கம் இருந்த இடம் : தென் மதுரை, இந்தச் சங்கத்தைச் சேர்ந்த நூல் : தொல்காப்பியம் . இதன் காலம்: கி.மு .நான்காம் நூற்றாண்டு.
- தமிழ் நூல்களில் தொல்காப்பியமே மிகப் பழமையானது.

- தொல்காப்பியம் 3 அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்ட இலக்கண நூல் .
- தொல்காப்பியம் படைத்த தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர்.
- கி.மு . 3 -ம் நூற்றாண்டு முதல் கி.பி 3-ம் நூற்றாண்டு வரையான காலம் : சங்க காலம்
- கடைச்சங்க காலமான கி.பி 1.2 - ம் நூற்றாண்டுகளில் தொகுக்கப்பட்ட நூல்கள்: சங்க இலக்கியம்.
- கடைச்சங்கம் இருந்த இடம் - மதுரை
- பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள். இவை பதினெண்மேல் கணக்கு எனப்படுகிறது.
- நற்றினை, குறுந்தொகை, ஐங்குநுறுாறு , பதிற்றுப்பத்து , பரிபாடல் , கலித்தொகை அகநானூறு, புறநானூறு ஆகியவை எட்டுத்தொகை நூல்கள்.
- திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) குறிஞ்சிப்பாட்டு முல்லைப்பாட்டு , பட்டினப்பாலை , நெடுநல்வாடை , மதுரைக்காஞ்சி ஆகியவை பத்துப்பாட்டு .
- தலைவன், தலைவி பெயரைக் குறிப்பிடாமல் அவர்களின் அன்பு வாழ்க்கையைச் சொல்பவை அகநூல்கள்.
- புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவை புறநூல்கள்.
- பரிபாடல், அகமும் புறமும் கலந்தது.
- பதிற்றுப்பத்து , சேர வரலாறு.
- அகநானூறே நெடுந்தொகை எனப்படுகிறது.
- கபிலர் எழுதிய நூலான குறிஞ்சிப் பாட்டில் 99 பூக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- பத்துப்பாட்டு நூலான முல்லைப்பாட்டு , நெஞ்சாற்றுப்படை எனப்படும் .
- கடியலூர் உருத்திரங்கண்ணார் எழுதிய பட்டினப்பாலை. காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் சிறப்பபைக் காட்டுகிறது.
- பத்துப்பாட்டு நூல்களிலேயே பெரிய நூல், மாங்குடி மருதனார் எழுதிய மதுரைக் காஞ்சி(782 அடிகள்)
- பட்டினப்பாலை , பொருநராற்றுப்படை ஆகிய இரு நூல்களும் கரிகால் சோழன் மேல் பாடப்பட்டவை.
- நெடுநல்வாடையும் திருமுருகாற்றுப்படையும் நக்கீரார் பாடியவை.
- பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப்படையும், கடியலூர்உருத்திரங்கண்ணனார் பாடியவை.
- சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர்: நல்லூர் நத்தத்தனார்.
- பொருநாராற்றுப்படையைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார்.
- ஆரிய அரசன் பிரகத்தனுக்கு தமிழ் அறிவித்து கபிலர் பாடியது- குறிஞ்சிப்பாட்டு
- சங்க நூல்களின் கலித்தொகையும் , பரிபாடலும் - இசைநூல்கள் .
- சங்க நூல்களில் அகமா? புறமா? என சர்ச்சைக்குரிய நூல் : நெடுநல்வாடை

சங்ககாலப் பெண் புலவர்கள்

- சங்க இலக்கியத்தில் 31 பெண் புலவர்களின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
- அதிகப் பாடல்களை எழுதியவர் : ஔவையார்(59 பாடல்கள்)

- அதியமானுக்கும் நெடுங்கிள்ளிக்குமான போரை பாட்டுத் திறத்தால் தவிர்த்தனர்: ஔவையார்.
- அற்றைத் திங்கள் - பாடலை எழுதியவர்கள்- பாரி மகளிர் (அங்கவை-சங்கவை).
- ஆதிமந்தியார், கரிகால் சோழனின் மகள்.
- ஆதிமந்தியாரின் கணவர்- சேரன் ஆட்டனத்தி.
- ஆதிமந்தியாரின் கதையை சேரதாண்டவம் - என்ற தலைப்பில் பாடியவர்: பாரதிதாசன்.
- கண்ணதாசனின் ஆட்டனத்தி- ஆதிமந்தி படைப்பே மன்னாதி மன்னன் திரைப்படம் .
- சோழ இளவரசன் கோப்பெரு நற்கிள்ளியின் மல்யத்ததப் பாடியவர் : நக்கண்ணையார்.
- காமக்கண்ணியார், நக்கண்ணையார் ஆகிய பெயர்களுக்கு வட மொழிப் பெயர்கள் காமாக்ஷி, சுலோசனா.
- சேரமன்னன் சேரலாதனைப் பாடி, அவனை மணந்தவர்: நச்செள்ளையார்.
- நச்செள்ளையார் காக்கையைப் பாடியதால் காக்கை பாடினியார் ஆனார்.
- இலக்கண நூல் இயற்றிய ஒரே பெண்பாற் புலவர்: காக்கை பாடினியார் : நூல் வைரமுத்து.
- தாய். தந்தை. அரசன், மகன் கடமைகளைப் பாடியவர் - பொன்முடியார்.
- தந்தையை, கணவனை. இழந்து , மகனையும் போருக்கு அனுப்பிய புறநானூற்றுத் தாயின் வீரத்ததைப் பாடியவர்: ஒக்கூர் மாசாத்தியார்.
- ஒக்கூர் , திரக்கோஷ்டியூருக்கு அருகிலுள்ளது.
- பேயோட்டும் வெறியாடல் பற்றிப் பாடியவர் : வெறி பாடிய காமக்கண்ணியார்.
- காழார்க்கீரன் எயிற்றியார் - வாடைப்புலவர் என்று சிறப்பிக்கப்படுகிறார்.

## சங்க நூல் செய்திகள்

- குடவோலை முறை - அகநானூறு.
- ஏழடி சென்று விருந்தினரை வழியனுப்பதல் - பொருநராற்றுப்படை.
- நேரம் அறிய நாழிகைவட்டிலைப் பயன்படுத்துதல் - முல்லைப்பாட்டு .
- கடைஏழ வள்ளல்கள் - சிறுபாணாற்றுப்படை.
- கார்த்திகை தீபம் - கார் நாற்பது.
- மௌரியர்கள், நந்தர்கள் - அகநானூறூ
- உண்ணும் முன் காக்கைக்கு சோறிடுதல் - பொருநராற்றுப்படை
- பொன்னை உரைத்து மாற்றுப் பார்த்தல் - பெரும்பாணாற்றுப்படை.
- பாகர்கள் யானையோடு பழகுதல் - முல்லைப் பாட்டு .
- காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தின் ஏற்றுமதி, இறக்குமதி - பட்டினப்பாலை.

## சங்க இலக்கியச் சாறு

- நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்(புறநானூறு-195)நரிவெரூவுந் தலையார்
- யாதும் ஊரே : யாவரும் கேளிர்
  தீதும் நன்று பிறர் தராவாரா(புறநானூறு -192)-கணியன் பூங்குன்றனார்.

- செல்வத்துப் பயனே ஈதல் (புறநானூறு 189)-நக்கீரர்
- இன்னா தம்ம இவ்வுலகம் இனிய காண்க
 அதன் இயல்புணர்ந்தோரே (புறநானூறு-194) -பக்குடுக்கை நன்கணியார்.
- நிலம் பெயரினும் நின்சொல் பெயரால்
 வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன்: மெய்கூறுவல்(புறநானூறு-131)
- முற்றிய திருவின் மூவராயினும்
 பெட்பின் றீதல் யாம் வேண்டலமே(புறநானூறு-205)
- வினையே ஆடவர்க்கு உயிரே
 மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்- குறுந்தொகை-125
- உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்- குறுந்தொகை.
- பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் - கலித்தொகை.
- உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே(புறநானூறு மணிமேகலை)
- புகழெதனின் உயிரும் கொடுக்குவர்
 பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்-கடலுள் மாய்தந்த இளம்பெருவழுதி.
- பீடின் மன்னர் புகழ்ச்சி வேண்டி செய்யா கூறி கிளத்தல்
 எய்யாதாகின்று எம் சிறு செந்நாவே (புறநானூறு)
- அறநெறி முதற்றே அரசின் கொற்றம்( புறநானூறு-56)
- பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே ☐ கபிலர்.
- எவ்வழி நல்லவர் ஆடவர்
 அவ்வழி நல்லை வாழிய நிலனே- ஔவை.
- நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
 மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்-மோசி கீரனார்.
- ஒருவீர் தோற்பினும் தோற்பது நும்குடியே
 இருவீர் வேறல் இயற்கையும் அன்றே - கோவூர் கிழார்
- நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று(நற்றிணை-210)

பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்

- நாலடியார் (அறம்) - சமண முனிவர்கள்.
- நான்மணிக்கடிகை (அறம்) - விளம்பி நாகனார்.
- இன்னா நாற்பது (அறம்) - கபிலர்.
- இனியவை நாற்பது (அறம்) - பூதஞ்சேந்தனார்
- திரிகடுகம் (அறம்) - நல்லாதனார்.
- ஆசாரக் கோவை (அறம்) - பெருவாயில் முள்ளியார்.
- பழமொழி (அறம்) - மூன்றுரையனார்
- சிறுபஞ்சமூலம் (அறம்) - காரியாசன்
- ஏலாதி(அறம்) - கணிமேதாவியார்
- முதுமொழிக்காஞ்சி (அறம்) - கூடலூர் கிழார்.
- திருக்குறள் (அறம்) திருவள்ளுவர்.
- ஐந்திணை அம்பது மாறன் பொறையனார்.
- திணை நூற்றைம்பது - கணிமேதாவியார்.
- ஐந்திணை எழுபது - மூவாதியார்.
- தினை மொழி ஐம்பது - கண்ணஞ் சேந்தனார்.

- கைந்நிலை- பல்லங்காடனார்.
- கார் நாற்பது - கண்ணன் கூத்தனார்.
- களவழி நற்பது (புறம) - பொய்கையார்.
- திருக்குறள் தவிர ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் , சங்ககாலர்துக்குப் பிற்பட்ட சங்கம் மருவிய காலத்தவை.
- பதினெண் கீழ்க்கணக்கில் 11 அற நூல்கள் . 6 அகநூல்கள் , 1 புற நூல்.
- கீழ்க்கணக்கில் கைந்நிலை நூலை ஏற்காதவர்கள் இன்னிலை எனும் நூலை கீழ்க்கணக்கு நூலாகக் கொண்டு கீழ்க்கணக்கில் அற நூல்கள் 12 அக நூல்கள் 5 என்பர்.

நீதி நூல்கள்

- ❖ கீழ்க்கணக்கு அற நூல்கள் 12 மற்றும் பிற்கால நீதி நூல்கள் 10(நீதி நூல் கொத்து)பாரதியார், பரதிதாசன் . ஆத்திசூடி ஆகியவை முக்கிய தமிழ் நீதி நூல்கள்.
- ❖ நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - தொடரில் நாலு என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
- ❖ மருந்து பெயரில் அமைந்தவை - திரிகடுகம் , சிறுபஞ்சமூலம் , ஏராதி.
- ❖ திரிகடுக மருந்துப் பொருட்கள் - சக்கு, மிளகு , திப்பிலி.
- ❖ பஞ்சமூல மருந்துப் - சிறுமல்லி , பெருமல்லி . சிறுவழுதுணை , பெருவழுதுணை, கண்டங்கத்திரி.
- ❖ ஏலாதி மருந்துப் பொருட்கள் - சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் , இலவங்கம் , நாககேசரம்.
- ❖ திரிகடுகம் . சிறுபஞ்சமூலம், ஏலாதி நூல்கள் மறையே பாடல் தோறும் 3,5,6 கருத்துகள் கொண்டவை.
- ❖ ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை , நீதிநெறி விளக்கம். நென்னெறி, உலகநீதி, அறநெறி சாரம். அருங்காலச்செப்பு ஆகிய பிற்கால நீதி நூல்கள் பத்தும் நீதி நூல் கொத்து எனப்படும்.
- ❖ ஔவையார் எழுதிய நீதிநூல்கள் : ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி.
- ❖ அதிவீரராம பாண்டியன் எழுதிய நீதிநூல்: வெற்றிவேற்கை.
- ❖ நீதிநெறி விளக்கம் எழுதியவர் குமரகுருபரர்.
- ❖ நன்னெறி நூலை சிவப்பிரகாசர் எழுதினார்.

திருக்குறள்

- திருக்குறள் . இரண்டாயிரம் ஆணடுகளுக்கு முற்பட்டது, திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர், தெய்வப் புலவா, பொய்யில் புலவர், செந்நாப் போதார் என்றெல்லாம் போற்றப்படுகிறார்.
- திருவள்ளுவரின் பெற்றோர் பெயர்: ஆதி- பகவான்.
- திருவள்ளுவரின் மனைவி பெயர்: வாசுகி.
- அறத்தப்பாலில் 38, பொருட்பாலில் 70, இன்பத்துப்பாலில் 25என திருக்குறளில் மொத்தம் 133 அதிகாரங்கள்.
- அதிகாரத்துக்கு 10 வீதம் -1330 குறட்பாக்கள்.
- திருக்குறள், இருமுறை இடம்பெறும் ஒரே தலைப்பு குறிப்பறிதல்.
- திருக்குறள், தமிழ்வேதம் எனப்படுகிறது.

- திருக்குறளுக்கு உரை கண்ட பதின்மர் தருமர். மணக்குடவர். தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருலையார், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர்.
- திருக்குறள் என்பது மொழிகளுக்குமேல் மொழிபெயர்க்கப்பட்டுளளது.
- திருக்குறளை ஆங்கிலத்தில் ஜி.யு.போப், லத்தீனில் வீரமாமுனிவர், ஜெர்மனில் கிரால்,ப்ரெஞ்சில் ஏரியல்,ரஷ்யனில் யூரி கில்சோவ், இந்தியில்ப பி.டி ஜெயின், வடமொழியில் அப்பாதீட்சிதர் ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர்.
- திருக்குறள்- தமிழ், தமிழ்நாடு . மூவேந்தர் , கங்கை , காவிரி, இமயாம் போன்ற குறிப்புகள் எதையும் ஓரிடத்தில்கூட குறிப்பிடாத இனம், மொழி , மதம் , காலம், கடந்த உலகப் பொதுநூலகம்.
- திருக்குறளில் அறிவு சார்ந்த செய்தகளை தவிர்த்து மாறாத்தன்மை கொண்ட மெய்யறிவு கருத்துகளே அதிகம் இடம்பெறுகிறது.
- திருக்குறள் இயல்பியலும், இலக்கியலும் கலந்த நீதிநூலாகும்.
- திருக்குறள் பற்றிய நூல்களில் கா.திருநாவுக்கரசின் திருக்குறள் அறஇலக்கியம், டாக்டர்.வா.செ.குழந்தைசாமியின் வாழும் வள்ளுவம். கவிஞர் ஈரோடு தமிழன்பனின் வணக்கம் வள்ளுவ ஆகிய நூல்கள் சாகித்ய அகாடமி வருது பெற்றவை.
- மூதறிஞர் வா. சு.ப.மாணிக்கனாரின் வள்ளுவம். டாக்டர் அ.ச.ஞானசம்பந்தனார் குறள் கண்ட வாழ்வு, டாக்டர் கலைஞரின் குறளோவியம் ஆகயவை திருக்குறள் பற்றிய வேறு சில முக்கிற நூல்களாகும்.
- அரசியலில் அர்த்தசாஸ்திரத்தை விஞ்சும் நெறிகளும், அற இயலில் மனுஸ்மிருதியில் இருந்து மாறுபட்டமைந்த உயர் நெறிகளும். இன்பத்துப் பாலில் வாத்சாயனாரிடமிருந்து முழுதும் மாறுபடும் உளம் சார்ந்த நோக்கும் திருக்குறளை உயர் தனி தமிழிச் செவ்விலக்கியமாக அடையாளப்படுத்துகின்றன.

காப்பியம்

- சோழர்கள் ஆட்சிக் காலம் - காப்பிய காலம்
- ஐம்பெருங்காப்பியங்களாவன: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.
- நாககமார காவியம், யுசோதர காவியம், உதயண குமார காவியம், சூளாமணி, நீலகேசி ஆகியவை ஐஞ்சிறுகாப்பியங்கள்.
- திருத்தக்க தேவர் எழுதிய விருத்தக்காப்பியம்: சீவகசிந்தாமணி.
- கம்பர் எழுதிய விருத்தக்காப்பியம்: கம்பராமாயணம்.
- கம்பர் தான் எழுதிய ராமாயணத்திற்கு இட்டபெயர்: ராமாவதாரம்.
- கம்பராமாயணம் 6 காண்டங்களைக் கொண்டது
- கம்பரின் பிறநூல்கள் : சடகோபரந்தாதி, ஏர்எழுபது, திருக்கை வழக்கம்.
- புகழேந்திப் புலவரின் வெண்பாக் காப்பியம்: நளவெண்பா.
- குண்டலகேசியை எழுதியவர்: நாதகுத்தனார்.
- திருத்தொண்டர் புராணம் எழுதியவர்: சேக்கிழார்.
- திருத்தொண்டர் புராணத்தின் வேறுபெயர்: பெரிய புராணம்.
- பெரியபுராணத்தின் கதைத்தலைவர்: சுந்தரர்.
- 63 நாயன்மார்களின் வரலாறு - பெரியபுராணம்.

## இரட்டைக் காப்பியங்கள்

- சிலப்பதிகாரம், மணிமேகலை - இரட்டைக் காப்பியங்கள்.
- இரண்டும் அணிகலன் பெயரில் அமைந்தவை.
- சிலம்பு - காலில் அணிவது.
- மணிமேகலை - இடையில் அணிவது.
- சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள.
- இளங்கோவடிகள் - சேரன் செங்குட்டுவனின் தம்பி.
- மணிமேகலையை எழுதியவர் : சீத்தலைச் சாத்தனார்.
- கண்ணகி, கோவலன் கதை - சிலப்பதிகாரம்.
- மணிமேகலையின் கதை - மணிமேகலை.
- இரண்டும் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியவை.
- இரண்டிலும் இந்திரவிழா குறிப்பிடப்படுகிறது.
- இந்திரவிழா 28 நாட்கள் நடக்கும்.
- இரண்டும் 30காதைகள் கொண்டவை.
- கோவலனைக் கவர்ந்த ஆடலரசி: மாதவி.
- கோவலன் - மாதவி மகள் : மணிமேகலை
- கண்ணகியின் தந்தை : மாநாய்கன்
- கோவலனின் தந்தை : மாசாத்துவன்
- கண்ணகியின் தோழி : தேவந்தி
- மாதவியின் தோழி : வயந்தமாலை.
- மாவியின் தாயார் : சித்திராபதி
- மணிமேகலையின் தோழி : சதமதி.

## சிலப்பதிகாரம்

- ❖ சிலப்பதிகாரத்தின் பிறபெயர்கள் : மூன்று நகரங்களின் கதை, வரலாற்று காப்பியம், குடிமக்கள் காப்பியம், முத்தமிழ் காப்பியம், முதல் தமிழ்க்காப்பியம்.
- ❖ சிலப்பதிகாரம் புகார்க் காண்டம்,மதுரைக் காண்டம் , வஞ்சிக் காணட்ம் என முப்பிரிவுகளைக்கொண்டு புகார், மதுரை , வஞ்சி நகர்களைச் சுற்றி அமையும் மூன்று நகரங்களின் கதை.
- ❖ கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் சிலையெடுத்த போது இலங்கை மன்னன் இரண்டாம் கயவாகு வந்திருந்த செய்தியைச் சான்றாகக் கொண்டு சிலம்பின் காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு என்பர்.
- ❖ சிலம்பில் சேரன்செங்குட்டுவன் பாண்டிய நெடுஞ்செழியன் அகிய மன்னர்கள் முக்கிய பாத்திரங்களாக இடம் பெறுவதாலும் சதகர்ணி என்ற சாதவாகன மன்னன் நூற்றுவ கன்னர் என்று குறிப்பிடப்படுவதாலும் சிலம்பை வரலாற்றுக் காப்பியம் எனலாம்.
- ❖ நற்றிணையில் இடம் பெறும் திருமாஉண்ணி கதையே விரித்து சிலப்பதிகாரமாக பாடப்பட்டதென்பர்.
- ❖ சிலம்பில் இடம்பெறும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், அதை இயற்தமிழ் காப்பியமாகவும், ஆய்ச்சியர் குரவை, குன்றகுரவை, வேட்டுவ வரி, கானல் வரி , அரங்கேற்றுக்காதை ஆகியவை அதனை

இசைத்தமிழ்க்காப்பியமாகவும் அதன் காட்சிப்பகுப்பு , செறிவான உரையாடல் கொண்ட வழக்குரைக்காதை ஆகியவை அதனை நாடகக்காப்பியமாகவும் மாற்றி மொத்தத்தில் சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியமாகிறது.

- ❖ சிலப்பதிகாரத்தின் தலைமை மாந்தர்கள் அரசன் அரசியாக இல்லாமல் வணிக குலத்தைச் சார்ந்த சாதாரண குடிமக்களாக இருப்பதால் சிலம்பை குடிமக்கள் காப்பியம் என்பார் தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்.
- ❖ சிலம்பில் கலையரசி மாதவி ஆடிய அல்லியம், கொடுகொட்டி , பாண்டரங்கம்,மல்லாடல், குடக்கூத்து, குடைக்கூத்து, கடையம், துடியாடல், பேடிக்கூத்து, மரக்காலாடல், பாவைக்கூத்து ஆகிய பதினோரு ஆடல்கள் இளங்கோவடிகளால் குறிப்பிடப்படுகின்றன.
- ❖ நாட்டுப்புற இசையைச் சார்ந்த வரிப்பாடல்களுக்கும், மகளிர் பந்தடித்துப் பாடும் கந்துக் வரி, நெல் குத்தும்போது பாடும் வள்ளைப் பாட்டு ஆகியவற்றுக்கும் இலக்கிய வடிவம் தந்தவர் இளங்கோ ஆவார்.

### இளங்கோவடிகள் தரும் பட்டங்கள்

- கருணை மறவன் : கோவலன்
- இல்லோர் செம்மல் : கோவலன்
- மண் தேய்த்த புகழினன்: கோவலன்
- கற்பின் கொழுந்து : கண்ணகி
- பொற்பின் செல்வி : கண்ணகி
- ஒரு மாமணியாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணி : கண்ணகி
- கற்புக்கடம் பூண்ட பொற்புடை தெய்வம் : கண்ணகி

### தொல்காப்பியர்

- ▪ இடைச்சங்க காலத்தவர், இலக்கண வல்லுநர்.
- ▪ அகத்தியரின் பன்னிரு மாணவர்களில் ஒருவர் என்பர்.
- ▪ காப்பியக்குடியில் தோன்றியதால் தொல்காப்பியர் எனப்பட்டார் என்கிறார் இளம்பூரணர்.
- ▪ திமதூரக்கினி என்பது தொல்காப்பியரின் இயற்பெயர் என்பது அறிஞர் சிலரின் கருத்து, இதை மறுப்பவர் பலர்.
- ▪ தொல்காப்பியம் என்ற நூலை எழுதியதால் தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.
- ▪ தொல்காப்பியத்திற்கு பாயிரம்(முன்னுரை போனறது) எழுதிய பனம்பரனார் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணாக்கர்.
- ▪ பனம்பரனாரின் தொல்காப்பியப் பாயிரத்தில் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம் என்று தமிழகத்தின் எல்லை வரையறுக்கப்படுகிறது.
- ▪ பாயிரத்தில் பானம்பரனார் தொல்காப்பியரை ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்கிறார்.
- ▪ ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பதற்கு ஐந்திரம் என்ற நூலில் புலமைபெற்றவர் தொல்காப்பியர் என்பது பொருள்.

- பாணினி முனிவர் இயற்றிய அஷ்டத்யாயி என்ற இலக்கண நூலுக்கு முன்பு செல்வாக்குடன் திகழ்ந்தது ஐந்திரம்.
- தொல்காப்பியத்தில் 250-க்கும் மேற்பட்ட இடங்களில் என்ப , மொழிப , என்மனார் புலவர் என்று வருவதால் காப்பியர் காலத்துக்கு முன் எண்ணிலடங்காத் தமிழ் நூல்கள் இருந்தது தெளிவு.
- தொல்காப்பியர் முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி தொல்காப்பியத்தை படைத்தார் என்கிறார் பனம்பரனார்.
- இலக்கிய வழக்கத்தையும் உலகியல் நடப்புகளையும் கொண்டு தொல்காப்பியம் எழுதப்பட்டது என்பதற்கு நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் என்ற தொல்காப்பிய நூற்பாவே சான்று.
- தொல்காப்பியர் காலம் கி.மு 4-ம் நூற்றாண்டு என்பது கே.என்.சிவராச பிள்ளை போன்ற வரலாற்று அறிஞர்கள் முடிவு.

தொல்காப்பியர்

- எழுத்து, சொல், பொருள் என் மூன்று அதிகாரங்கள் கொண்டது.
- அதிகாரத்திற்கு 9 இயல்கள் வீதம் 27 இயல்களுடன் 1611 நூற்பாக்களை உடையது
- எழுத்துகளின் வகை, அவை வருமிடங்கள், எழுத்தகளின் தோற்றம், உச்சரிப்பு மாற்றங்கள் பற்றி கூறுவது எழுத்ததிகாரம்.
- எழுத்ததிகாரம் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், உருபியல் உள்ளிட்ட 9 இயல்களையும் 488 நூற்பாக்களையும் கொண்டது.
- தமிழ் எழுத்தகளின் வகைகளையும், எழுத்துகளை உச்சரிக்க ஆகும் கால அளவான மாத்திரை பற்றியும் சொல்வது நூன்மரபு.
- எழுத்து எனப்படுப அகரம முதல் னகரம் இறுவாய் முப்ப.்.து என்ப - என்பதே தொல்காப்பியத்தின் முதல் நூற்பா.
- ஒரு சொல்லில் முதலில், இறுதியில் வரும் எழுத்துக்கள் எவை? வராத எழுத்துகள் எவை? என்பதை பற்றி விளக்குவது மொழிமரபு.
- பிறப்பியலில் வயிற்றில் பிறக்கும் எழுத்து எது? தொண்டையில் பிறக்கும் எழுத்து எது? என்பது பற்றி விளக்குவது மொழிமரபு.
- பிறப்பியலில் வயிற்றில் பிறக்கும் எழுத்து எது? தொண்டையில் பிறக்கும் எழுத்து எது? என்பது போன்ற கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.
- இன்றைய மொழியியல் பிரிவுகளில் ஒன்றான ஒலியியல் துறையின் கருத்துகளை 2500 ஆண்டுகளுக்கு முன்பே தொலகாப்பியர் பிற்ப்பியலில் சொல்லியிருப்பதைக் கண்டு வியக்கின்றனர் மேல்நாட்டு வல்லுநர்கள்.
